முருகப்பெருமான் துணை

**மகான் பத்ரகிரியார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

12.05.2022, வியாழக்கிழமை

1. தவசியே ஆறுமுக ஞானியே
   தரும பலமிக்க அண்ணலே
   அவனியில் உன் பெருமை கூறி
   அறிவிப்பேன் அருளாசி தன்னை
2. தன்னிலே சுபகிருது தகர் திங்கள்
   தக்கபடி இருபான்நவ திகதி குருவாரம்
   (சுபகிருது வருடம் சித்திரை மாதம் 29 ம் நாள், 12.05.2022 வியாழக்கிழமை)
   நன்னயமாய் பத்ரகிரியார் யானும்
   நாட்டிடுவேன் உலகநலம் பெற
3. நலம்தரும் ஆறுமுக சக்தியான
   ஞான தேசிகன் அருள்தயவு
   பலம் பெற்ற மக்கள் வாழ்வில்
   பகை பிரச்சினை அனைத்தும் விலகும்
4. விலகுமே ஏவல் சிக்கலும்
   வினைகளும் அகன்றுமேவுமே
   சலனமான சகல மாயையும்
   சடுதி அகன்று மாற்றம் காணும்
5. காணுமே மனத்தெளிவு திடம்
   காணுமே சர்வ பலமும்
   காணுமே ஞானவான் எனும்
   கண்ணியமான வாழ்வும் நிறைவும்
6. நிறைவுதரும் தவ தரும பலமான
   நீதிகாக்கும் ஞானி அரங்கன்
   குறைவிலா திருவடி பற்றி
   குருவேயென தருமம் செய்துவர
7. வருகவே துன்பங்கள் ஓடும்
   வளரும் பிரச்சினை அனைத்தும்
   முருகா எனும் செபதபம் செய்ய
   முழுமைபட விலகி மாற்றம் காண்கும்
8. காண்கவே ஞான வழிபாடெனும்
   கந்தவேலன் சரவணச் சுடரை
   உண்மைபட நம்பிக்கை குறையா
   உயர்வாக ஏற்றி நித்ய பூசை
9. பூசைதனை தொடர்ந்து செய்ய
   புகலுவேன் ஞானிகள் இறங்கி
   ஆசிதந்து காப்பர் என்பேன்
   ஆற்றல் கூட்டி மீட்பர் என்பேன்

10. என்கவே ஞான சக்தியதும்
இணையிலா துணையாகியே
நன்மைதரும் நல்ல வாழ்வுதரும்
ஞானமோடு சகல பலமும் தரும்

11. தருகவே உலகம் எங்கிலும்
தருமநிலை பெருகப் பெருக
வருமுலகில் ஞான ஆட்சியெனும்
வல்லமையான ஞானிகள் ஆட்சி மலரும்

அருளாசி முற்றே

–சுபம்–